ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1718/27 - 2011 අගෝස්තු 12 වැනි සිකුරාදා - 2011.08.12

*1718/27 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**நகர சபைகள் கட்டளைச் சட்டம்**

கட்டளை

(255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (ஈ) பந்தியினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் ஏ. எல். எம். அதாஉல்லா ஆகிய நான், இக்கட்டளையின் மூலம், 1978 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆந் திகதிய 329/8 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் பிரகாரம் அமைத்துருவாக்கப்பட்ட அம்பாந்தோட்டை நகர சபையை, அம்பாந்தோட்டை மா நகர சபையாக அமைத்துருவாக்குவதற்காக "2011, நவெம்பர் மாதம் முதலாம் திகதி" முதல் அமுலுக்கு வரும் வகையில் கலைக்கின்றேன்.

ஏ. எல். எம். அதாஉல்லா,
உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர்.

கொழும்பு,
2011, ஓகத்து 11.

8- 685/1

---

**மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்**

**கட்டளை**

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் ஏ. எல். எம். அதாஉல்லா ஆகிய நான், (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம், 3 ஆம், 5 ஆம் மற்றும் 9 ஆம் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, இக்கட்டளையின் மூலம் -

(1) இதற்கான அட்டவணையின் (1) ஆம் பகுதியில் குறித்துரைக்கப்பட்டிருக்கும் இடப்பரப்பை அக்கட்டளைச் சட்டத்தின் நோக்கத்திற்கென மாநகர சபை பிரதேசமொன்றாக வெளிப்படுத்துகின்றேன் ;

(2) குறித்த மாநகர சபை பிரதேசத்தின் எல்லைகள் அட்டவணையின் (ii) ஆம் பகுதியில் குறித்துரைக்கப்பட்டுள்ள எல்லைகளாகவிருத்தல் வேண்டுமென குறித்துரைக்கின்றேன் ;

(3) இக்கட்டளையின் (1) ஆம் பந்தியின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள மாநகர சபைக்கு பின்வரும் பெயரையும், பதவிப்பெயரையும் குறித்தொதுக்குகின்றேன்,

"அம்பாந்தோட்டை மாநகர சபை"

(4) அம்பாந்தோட்டை மாநகர சபையானது, மாநகர முதல்வரையும், பிரதி மாநகர முதல்வரையும் வேறு பத்து உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டுமென்று விதித்துரைக்கின்றேன் ;

(5) அம்பாந்தோட்டை மாநகர சபையின் பதவிக்காலம் ஆரம்பமாக வேண்டிய திகதியாக 2011, நவெம்பர் மாதம் முதலாம் திகதியையும் நிர்ணயிக்கின்றேன்.

ஏ. எல். எம். அதாஉல்லா,
உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர்.

கொழும்பு,
2011, ஒகத்து 11.

**அட்டவணை**

**பகுதி I**

**பின்வரும் கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய காணி இடப்பரப்பு** :

(89) கொஹொலன்கல, (90) சிறிபோபுர, (91) காலியபுர, (92) சாமோதாகம, (93) அம்பாந்தோட்டை கிழக்கு, (94) அம்பாந்தோட்டை மேற்கு, (123) மிரிஜ்ஜவில.

**பகுதி II**

**அம்பாந்தோட்டை மாநகர சபையின் நிர்வாக எல்லைகள்** :

வடக்கு :

மிரிஜ்ஜவிலவிலிருந்து சூரியவெவ வரையான 100 அடி வீதியின் மத்திய கோடு பிரிவு இலக்கம் 120 பெல்லகஸ்வெவ மற்றும் பிரிவு இலக்கம் 92 சமோதாகம ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் பொது எல்லையை வெட்டும் புள்ளியில் ஆரம்பித்து மேலே குறிப்பிடப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் பொது எல்லையூடாக கிழக்கு நோக்கி 90 ஆம் இலக்க சிறிபோபுர கிராம உத்தியோகத்தர் பிரிவின் வடக்கு எல்லையைச் சந்திக்கும் புள்ளி வரையும், அங்கிருந்து கிழக்கு நோக்கி சிறிபோபுர கிராம உத்தியோகத்தர் பிரிவின் வடக்கு எல்லை மற்றும் இலக்கம் 120 பெல்லகஸ்வெவ கிராம உத்தியோகத்தர் பிரிவின் கிழக்கு எல்லையை வெட்டும் புள்ளி வரையும் அங்கிருந்து பெல்லகஸ்வெவ மற்றும் இலக்கம் 91 காலியபுர கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் பொது எல்லைகள் ஊடாக வடக்கு நோக்கி இலக்கம் 95 கொண்ணொறுவ கிராம உத்தியோகத்தர் பிரிவின் தெற்கு எல்லையைச் சந்திக்கும் புள்ளி வரையும் அங்கிருந்து கொண்ணொறுவ மற்றும் காலியபுர கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் பொது எல்லைகள் ஊடாக கிழக்கு நோக்கி மலல ஆரையின் மத்திய கோட்டைச் சந்திக்கும் புள்ளி வரையும் ;

கிழக்கு :

மேலே இறுதியாக குறிப்பிடப்பட்ட புள்ளியில் ஆரம்பித்து மலல ஆரை மத்திய கோட்டின் ஊடாக கீழ் நோக்கி மலல ஆரை களப்பை சந்திக்கும் புள்ளி வரையும் அங்கிருந்து மலல ஆரை களப்பின் மேற்கு எல்லை ஊடாக தெற்கு நோக்கி மலல கழிமுகத்தின் மேற்கு எல்லை கடல் அலைகளின் ஏற்ற எல்லைக் கோட்டைச் சந்திக்கும் புள்ளி வரையும் ;

தெற்கு :

மேலே இறுதியாக குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து அலை ஏற்றக் கோட்டினூடாக மேற்கு நோக்கி மிரிஜ்ஜவில சந்தியிலிருந்து கடல் வரையான நடைபாதையின் மத்திய கோடு மற்றும் அலை ஏற்றக்கோட்டைச் சந்திக்கும் புள்ளி வரையும்,

மேற்கு :

மேலே இறுதியாக குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து மிரிஜ்ஜவில சந்தி வரையான நடைபாதையின் மத்திய கோட்டின் ஊடாக வடக்கு நோக்கி கொழும்பு - வெல்லவாய (ஏ- 2) பிரதான வீதியின் மத்திய கோடு மற்றும் சூரியவெவ - மிரிஜ்ஜவில வீதியின் மத்திய கோட்டை சந்திக்கும் புள்ளி வரையும் அங்கிருந்து சூரியவெவ - மிரிஜ்ஜவில வீதியின் மத்திய கோட்டினூடாக வடக்கு நோக்கி ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆரம்ப புள்ளி வரையுமாகும்.

8- 685/2

**1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்**

*கட்டளை*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அம்பாந்தோட்டை பிரதேச சபையின் அமைத்துருவாக்கம் தொடர்பில் 1987 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆந் திகதிய 453/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்டதையடுத்து 2005, திசெம்பர் மாதம் 01 ஆந் திகதிய 1421/26 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் திருத்தியமைக்கப்பட்ட கட்டளையை, குறித்த சட்டத்தின் 2 ஆவது மற்றும் 9அ எனும் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் ஏ. எல். எம். அதாஉல்லா ஆகிய நான், இக்கட்டளை மூலம் -*

*(1) அதன் அட்டவணைகளை நீக்கி அதற்குப் பதிலாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையை பதிலீடு செய்வதன் மூலம் திருத்தியமைக்கின்றேன் ;*

*(2) இக்கட்டளை அமுலுக்கு வரும் திகதியாக 2011, நவெம்பர் மாதம் முதலாம் திகதியை விதித்துரைக்கின்றேன்.*

*ஏ. எல். எம். அதாஉல்லா,*
*உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர்.*

*கொழும்பு,*
*2011, ஓகத்து 11.*

**அட்டவணை**

*பகுதி I*

**பின்வரும் கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய காணி இடப்பரப்பு** :

*(81) பூந்தல, (82) சிறியாகம, (83) பல்லேமலல, (84) யூல்கமுவ, (85) பந்தகிரிய (86) தம்மென்னாவ, (87) யகன்கல மேற்கு (88) யகன்கல கிழக்கு, (95) கொன்னொறுவ, (96) கெடென்வெவ, (97) எலல்ல, (116) சிறியம்பலாகஸ்வில வடக்கு, (117) சியம்பலாகஸ்வில தெற்கு, (118) கல்வெவ, (119) உடபெரகம, (120) பெல்லகஸ்வில, (121) பஹலபெரகம, (122) அரவனமுல்ல, (124) சிசிலசகம, (125) வளவ, (126) கொடவாய, (127) தெஹிகஹலந்த, (128) மானஜ்ஜாவ.*

*பகுதி II*

**அம்பாந்தோட்டை பிரதேச சபையின் நிர்வாக எல்லைகள்** :

*வடக்கு :*

*லுனுகம்வெஹெர மற்றும் சூரியவெவ பிரதேச செயலாளர் பிரிவுகளின் பொது எல்லை, அம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவின் வடக்கு எல்லையை சந்திக்கும் புள்ளியில் ஆரம்பித்து, கிழக்கு நோக்கி லுனுகம்வெஹெர பிரதேச செயலாளர் பிரிவின் 47 ஆம் இலக்க மஹஅளுத்கம் ஆர கிராம உத்தியோகத்தர் பிரிவின் மேற்கு எல்லை, 49 ஆம் இலக்க பஹல மத்தல கிராம உத்தியோகத்தர் பிரிவின் தெற்கு எல்லை, 63 ஆம் இலக்க மிஹிந்துபுர கிராம உத்தியோகத்தர் பிரிவின் மேற்கு எல்லை, 65 ஆம் இலக்க சேனபுர கிராம உத்தியோகத்தர் பிரிவின் மேற்கு எல்லை, 79 ஆம் இலக்க ரம்புக்கெவ கிராம உத்தியோகத்தர் பிரிவின் மேற்கு எல்லை, 78 ஆம் இலக்க வெலிகந்த கிராம உத்தியோகத்தர் பிரிவின் தெற்கு மற்றும் கிழக்கு எல்லைகளினூடாக லுனுகம்வெஹெர மற்றும் திஸ்ஸ மஹாராம பிரதேச செயலாளர் பிரிவுகளின் பொது எல்லை, அம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவின் பொது எல்லையை சந்திக்கும் புள்ளி வரையும், அங்கிருந்து திஸ்ஸமஹாராம பிரதேச செயலாளர் பிரிவின் 28 ஆம் இலக்க திஸ்ஸபுர கிராம உத்தியோகத்தர் பிரிவின் தெற்கு எல்லை, 24 ஆம் இலக்க விஜேபுர கிராம உத்தியோகத்தர் பிரிவின் தெற்கு எல்லை மற்றும் 23 ஆம் இலக்க கோன்வெலான கிராம உத்தியோகத்தர் பிரிவின் தெற்கு எல்லை ஊடாக கிரிந்தி ஓயாவைச் சந்திக்கும் புள்ளிவரையும் ;*

*கிழக்கு :*

*இறுதியாக குறிப்பிடப்பட்ட புள்ளியில் ஆரம்பித்து கிரிந்திஓயா மேற்கு எல்லை ஊடாக தெற்கு நோக்கி இந்து சமுத்திரத்தின் அலை ஏற்றக் கோட்டை சந்திக்கும் புள்ளி வரையும் ;*

*தெற்கு :*

*மேலே குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து அலை ஏற்றக் கோட்டினூடாக மேற்கு நோக்கி மலல கழிமுகம் மேற்கு எல்லை அலை ஏற்றக் கோட்டைச் சந்திக்கும் புள்ளி வரையும், அங்கிருந்து மலல களப்பின் மேற்கு எல்லை ஊடாக வடக்கு நோக்கி மலல ஆரையின் மத்திய கோடு களப்பைச் சந்திக்கும் புள்ளி வரையும், அங்கிருந்து மலல ஆரையின் மத்திய கோட்டின் ஊடாக வடக்கு நோக்கி 95 ஆம் இலக்க கொன்னொறுவ மற்றும் 91 ஆம் இலக்க கேளியபுர கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் பொது எல்லை மலல ஆரையின் மத்திய கோட்டைச் சந்திக்கும் புள்ளி வரையும், அங்கிருந்து மேலே குறிப்பிடப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் பொது எல்லை ஊடாக தென்மேற்கு நோக்கி 120 ஆம் இலக்க பெல்லகஸ்வெவ கிராம உத்தியோகத்தர் பிரிவின் எல்லையைச் சந்திக்கும் புள்ளி வரையும், அங்கிருந்து தென்கிழக்கு நோக்கி 120 ஆம் இலக்க பெல்லகஸ்வெவ மற்றும் 91 ஆம் இலக்க கேளியபுர கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் பொது எல்லை ஊடாக 90ஆம் இலக்க சிறிபோபுர கிராம உத்தியோகத்தர் பிரிவின எல்லையைச் சந்திக்கும் புள்ளி வரையும், அங்கிருந்து தென்மேற்கு நோக்கி 120 ஆம் இலக்க பெல்லகஸ்வெவ மற்றும் 90 ஆம் இலக்க சிறிபோபுர ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் பொது எல்லை ஊடாக மிரிஜ்ஜவில தொடக்கம் சூரிய வெவ வரையான 100 அடி வீதியின் மத்திய கோட்டின் ஊடாகக் கொழும்பு, வெல்லவாய (ஏ 2) வீதியின் மத்திய கோடானது 100 அடி வீதியின் மத்திய கோட்டைச் சந்திக்கும் புள்ளி வரையும், அங்கிருந்து தெற்கு நோக்கி கடல் வரையான நடைபாதையின் மத்திய கோட்டின் ஊடாக அலை ஏற்ற கோட்டைச் சந்திக்கும் புள்ளி வரையும், அங்கிருந்து மேற்கு நோக்கி அலை ஏற்றக் கோட்டின் ஊடாக அம்பாந்தோட்டை மற்றும் அம்பலாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவுகளின் பொது எல்லையைச் சந்திக்கும் புள்ளி வரையும் ;*

*மேற்கு :*

*இறுதியாக குறிப்பிடப்பட்ட புள்ளியில் ஆரம்பித்து வடக்கு நோக்கி அம்பலாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவின் 142 ஆம் இலக்க வாந்துருப்ப கிராம உத்தியோகத்தர் பிரிவின் கிழக்கு எல்லை, 143 ஆம் இலக்க அம்பலாந்தோட்டை தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவின் கிழக்கு எல்லை, 144 ஆம் இலக்க அம்பலாந்தோட்டை வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவின் கிழக்கு எல்லையும், 140 ஆம் இலக்க போளான தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவின் தெற்கு எல்லை, 141 ஆம் இலக்க குடாபோளான கிராம உத்தியோகத்தர் பிரிவின் கிழக்கு எல்லை மற்றும் 135 ஆம் இலக்க மோதர பிலிவல கிராம உத்தியோகத்தர் பிரிவின் கிழக்கு எல்லை மற்றும் 134 ஆம் இலக்க கொக்கல கிராம உத்தியோகத்தர் பிரிவின் கிழக்கு எல்லை ஊடாக 138 ஆம் இலக்க கொடகொக்கல கிராம உத்தியோகத்தர் பிரிவின் கிழக்கு எல்லை சூரியவெவ பிரதேச செயலாளர் பிரிவின் எல்லையைச் சந்திக்கும் புள்ளி வரையும், அங்கிருந்து சூரியவெவ பிரதேச செயலாளர் பிரிவின் 137 ஆம் இலக்க ஹபரத்தவல கிராம உத்தியோகத்தர் பிரிவின் தெற்கு எல்லை, 136 ஆம் இலக்க வெதிவெவ கிராம உத்தியோகத்தர் பிரிவின் தெற்கு மற்றும் கிழக்கு எல்லைகளும், 109 ஆம் இலக்க அந்தரவெவ கிராம உத்தியோகத்தர் பிரிவின் கிழக்கு எல்லை மற்றும் 99 ஆம் இலக்க ரன்முதுவெவ கிராம உத்தியோகத்தர் பிரிவின் தெற்கு எல்லை ஊடாக ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட லுனுகம்வெஹெர மற்றும் அம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவுகளின்.*

*8- 685/3*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.